1990 ஏப்ரல் 17]

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களிலே வீட்டுவசதி வாரியத்திலே முறைகேடாக ஒருவருக்கே பினாமியாக 3, 4 வீடுகள் கொடுக்கப்பட்டதாக இந்த மாமன்றத்திலே ஆதாரப் பூர்வமான குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டு அவைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்த பினாமி வீடுகளை மீண்டும் அரசு கையகப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடுகளும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அடிப்படையில் இருக்கக்கூடிய குறைகளும் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளைத் திரும்பப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றது.

தூத்துக்குடியில் விமான நிலையம்

*5266. திரு. பொன். விஜயராகவன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தூத்துக்குடியில் விமான நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இவ்விமான நிலையம் எப்போது முதல் விமானப் போக்குவரத்துக்குத் திறந்து வைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) விமான நிலையம் அமைப்பதற்கான நிலங்கள் கையகப் படுத்தப்பட்டுவிட்டன. நிலங்கள் சமன் செய்தல், குடிநீர், மின் இணைப்பு அளித்தல், இணைப்புச் சாலை அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) விமான நிலையம் அமைக்கும் பணியைத் தேசிய விமான நிலையக் குழுமம் முடித்தவுடன் விமான நிலையம் விமானப் போக்குவரத்திற்குத் திறந்து வைக்கப்படும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, தூத்துக்குடி விமான நிலையத்திற்கு பக்கத்து ஊர்களிலேயிருந்தும் நகரங்களிலேயிருந்தும் பயணிகள் வந்து போவதற்கு வசதியாகத் தேவையான சாலைகள், பாலங்கள் கட்டுவதற்கு ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றினை தமிழ்நாடு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசு மேற்கொள்ளுமா? ஏனென்றால், இப்போது ஆழ்வார் திருநகரிலேயிருந்து இந்த விமான நிலையத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால் சுற்றி வரவேண்டியிருக்கிறது. தாமிரபரணியிலே ஒரு தாம்போதி கட்டிவிட்டால், 10 கிலோ மீட்டர் அதற்குக் குறைவாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொண்டு, அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

9–25 மணி

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி வளர்ந்து வருகின்ற ஒரு மாபெரும் தொழில் நகரம். மற்றும் கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில் அது ஒரு சுற்றுலா மையம். ஆகவே இரண்டு இடங்களுக்கும் வருகின்ற பயணிகள் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால், விமானப் போக்குவரத்து அவசியம் தேவைப்படுகின்றது. அது விரைவில் நடைபெறுமா? அதற்கான முயற்சிகளைச் செய்ய மத்திய அரசிடம் நமது மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, விமான தளம் அமைக்கக்கூடிய பணிகளைத்தான் நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அதுவும் அந்த விமான நிலையம் அமைப்பதற்கான நிலத்தை எடுத்துக் கொடுப்பது, தேவையான பாதைகளைப் போட்டுத் தருவது, தண்ணீர், மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகளை மாநில அரசு பார்த்துச் செய்தவுடன், இன்டர்நேஷனல் ஏர்போர்ட் அத்தாரிட்டி ஆப் இந்தியாவிடம் ஒப்படைத்து, அதன்பிறகு அவர்கள் விமானங்கள் வந்து இறங்குவதற்குத் தேவையான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வார்கள். அதற்குப் பிறகுதான், அங்கே வந்து போகக்கூடிய பயணிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு விமானங்களின் எண்ணிக்கை மற்றும் அவைகளை கன்னியாகுமரிக்கு விடுவதா, தூத்துக்குடியோடு நிறுத்துவதா என்பதையெல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவை அவர்கள் எடுப்பார்கள்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் இதுபோன்ற விமான நிலையங்கள் வேறு இடங்களில் அமைக்கும் திட்டம் இருக்கிறதா? அப்படியிருந்தால் விமானப் போக்குவரத்து எந்த இடங்களில் துவங்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தூத்துக்குடி மட்டுமல்லாமல், சேலத்திலும் விமான நிலையம் அமைக்கக்கூடிய ஒரு திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான ஆக்கபூர்வமான வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

1990 ஏப்ரல் 17]

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இந்த விமான தளம் கட்டுவதற்கு வேண்டிய நிலம் பூராவும் நமது மாநில அரசே ஏற்பாடு செய்து கொடுக்கிறது. அதுவும் போதாமல் ரோடு, தண்ணீர் போன்ற வசதிகளும் செய்து கொடுக்கிறோம். சுருக்க மாகச் சொன்னால், நிலமும் அதற்குத்தேவையான infrastructure போன்றவைகளையும் ஏற்பாடு செய்து கொடுக் கிறோம். இதற்கான செலவு முழுவதும் மத்திய அரசு அல்லது இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன் போன்றவர்கள் நமக்கு தருகிறார்களா ? அல்லது நாமே முழுவதையும் செலவு செய் கிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதைப்பற்றிய முழுத் தகவலும் என்னிடத்திலே இல்லை. தனியாகக் கேள்வி போடு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி : தலைவர் அவர்களே, பசும் பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் செட்டி நாட்டில் விமான தளம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் முன்பு இருந்தது. இப்போது அதனுடைய நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே. இது தூத்துக்குடி விமான நிலையத்தைப் பற்றிய கேள்வி. அவர் கேட்கிற விவரக்குறிப்புகள் என்னிடம் இல்லை. தூத்துக்குடி பற்றிய விவரங்கள் தான் என்னிடம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. வே. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருநாவலூரில், பூமாம்பாக்கம் என்ற இடத்தில் விமான நிலையம் ஒன்று வெள்ளையர் காலத்தில் இருந்தது. இப்போது அது கேட்பாரற்றுக் கிடக்கிறது. அதைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுவே கேட் பாரற்றுக் கிடக்கும் இடமாக இருக்கும்போது, அரசுக்கு அதைப் பற்றித் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதற்குப் பிறகு, கேட்பவர்களும் இருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS